1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் வினா—விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

முற்
10

படித்து வேலைவாய்ப்பில்லார்க்கு விவசாயப் பயிற்சி

*259. வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கட்கு விவசாயத்துறையில் பயிற்சி அளித்து அத்தொழிலில் ஈடுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: படித்து வேலையில்லாமலிருப்பவர்களுக்கு விவசாயத்தில் பயிற்சி அளித்து அவர்களை அத்தொழிலில் ஈடுபடுத்தும் திட்டங்கள் ஒன்றும் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் 18 முதல் 30 வரை வயதுள்ள எட்டாம் வகுப்பு வரை படித்து தேர்ச்சிபெற்ற விவசாயிகளின் பிள்ளைகளுக்கு விவசாயத்தில் ஓராண்டுக்காலம் பயிற்சி அளித்து அவர்களை சிறந்த விவசாயிகளாக ஆக்குவதற்குத் திட்டம் ஒன்று ஏற்கனவே அமலில் இருந்துவருகிறது. உயர்நிலைப்பள்ளியில் இறுதி ஆண்டு தேர்ச்சியுற்ற நபர்களுக்கு விவசாயத்தில் (டிப்ளமா) அத்தாட்சி பத்திரவகுப்பு ஆரம்பிப்பதுபற்றி விவசாய இயக்குநர் கடந்த நவம்பரில் செயற்குறிப்பு ஒன்றை அரசின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தார். அதன்மீது அரசு இத்திட்டத்தை தற்பொழுது 1972-73-ம் ஆண்டிற்கான இரண்டாவது பாகத்திட்டமாகச் சேர்த்துக்கொள்வதற்கு காலதாமதம் ஆகிவிட்டபடியால், அடுத்த ஆண்டிற்கான, அதாவது 1973-74-க்கான இரண்டாவது பாகத்திட்டத்தில் சேர்த்துப் பரிசீலனை செய்வதற்கு தன் செயற்குறிப்பை அனுப்புமாறு கடந்த ஜனவரித் திங்களில் வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இளைஞர் அணியில் சேர்த்துக்கொள்ளப்படும் இளைஞர்களை இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்தி, அவர்களுக்கு விவசாயத் துறையில் பயிற்சி அளித்து, இத்தொழிலில் ஈடுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அப்படி அவர் சொல்லுகின்ற முறையில் திட்டம் பரிசீலனையில் இல்லை. ஆனால் டிப்ளமா கொடுப்பது பற்றிய திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலிருந்து டிப்ளமா கோர்ஸ் துவங்க ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஆரம்பிக்க இருக்கும் கோர்ஸில் எத்தனை மாணவர்களைச் சேர்க்க இருக்கிறார்கள். சேரக்கூடிய மாணவர்களுக்கு ஏதாவது கல்வித்தரம் வைக்கப்பட்டிருக்கிறதா? அதுபற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: யோசனையில் இருக்கிறது என்று சொன்னேன். ஆய்வு முடிந்த பிறகு புள்ளி விவரங்கள் சொல்லப்படும்.

[1972 ஆகஸ்ட் 22

திருமதி த. ந. அனந்தநாயகி : ஏற்கெனவே ஒரு வருஷம் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பயிற்சி பெறுகின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டா? அல்லது சொந்த நிலங்களில் பயிரிடுவதற்குத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சில பேர் சொந்த நிலங்களையும் பார்த்துக்கொள்கிறார்கள். சில பேருக்கு வேலையும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Pesticides for tobacco and turmeric.

*** 260. Thiru N. K. Palanisamy. Will the Hon. the Minister for Agriculture be pleased to State whether any specific Pesticides have been invented for tobacco and turmeric?**

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : ஏற்கனவே டையாதீன் என்ற ஒரு மருந்து இருந்தது. ஆனால் இப்பொழுது சப்ளை இல்லை. அதாவது, புகையிலை புழுக்கள் அழித்துவிடுவதால் ஏராளமான விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்கு எந்தவிதமான மருந்தும் இல்லை. ஆகவே, ரிசர்ச் டிபார்ட்மெண்ட் மூலமாக, இதைத் தடுக்க தனியாக மருந்து கண்டுபிடிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : புகையிலை, மஞ்சளுக்கென்று தனியாக பூச்சி மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இரண்டொரு மருந்துகளை வைத்து பயிர்களை பாதுகாக்கிறார்கள். எங்கெங்கு பூச்சி விழுந்திருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த மருந்துகளை உபயோகித்து பயிர் செய்கிறார்கள் என்று உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக, பெஸ்டிசைட்ஸ், வீடிசைட்ஸ் சம்பந்தமான ஆராய்ச்சிகள் மிகவும் மந்தமாகிக்கொண்டிருக்கின்றன. அதை நல்ல முறையிலே ஏன் செய்யவில்லையென்று அரசாங்க அதிகாரிகளைக் கேட்டால் வெளிநாட்டிலிருந்துதான் மருந்துகளை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி தரவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, இதற்காக மத்திய அரசாங்கத்தோடு நம்முடைய அரசாங்கம் போரிடுமா? மந்தமாக இருக்கும் பெஸ்டிசைட்ஸ், வீடிசைட்ஸ் ஆராய்ச்சிகளை தீவிரப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மத்திய அரசோடு போராடுவது பற்றிய நீண்ட பலவிவாதங்கள் எல்லாம் அங்கத்தினருக்குத் தெரியும். ஆகவே இது பற்றிக் கேட்டிருந்தால்கூட நான் சொல்லத் தேவையில்லையென்று கருதுகிறேன். பயிர்கள் அழியாத வண்ணம் இருக்கிற பூச்சி மருந்துகளை வைத்து, தடுப்பு நடவடிக்கைகளை எங்கெங்கு